# ஏசிடி பைபர்நெட் இணையதளச் சேவை அறிமுகம்

பெங்களூரு, ஜூலை 24: பெங்களூருவில் வியாழக்கிழமை ஏசிடி பைபர்நெட் இணையதளச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் தலைவர் பாலா மல்லாடி செய்தியாளர்களிடம் கூறியது:

இந்தியாவில் இணையதளச் சேவைகள் அதிகரித்து வருகிறது. இணையதள வேகத்தை அதிகப்படுத்தும் நோக்கில், இந்த புதிய சேவை பெங்களூருவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

60 எம்.பி.பிஎஸ். திறன் கொண்ட இந்த இணையதளச் சேவை மூலம் விரைவாகவும், தெளிவாகவும் காட்சிகளைப் பார்க்க முடியும் என்றார் அவர்.